கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் - 2024

--

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 மறுப்பு அபிப்பிராயம்

கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தகிதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்தது வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

1.2 மறுப்பு அபிப்பிரயாத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு என்னால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக மறுப்பு அபிப்பிராயம் வெளியிடப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இலங்கை கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிறுவனத்தை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் நிறுவனத்தை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிறுவனத்தை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிறுவனத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது நிறுவனத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

	இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,493,635 கிரயமான பிரதான களஞ்சியத்தில் காணப்பட்ட ஜீஅய் குழாய்கள் இருப்பு, கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டதனால் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ரூபா 2,493,635 அதிகரித்தும் இருப்புக்கள் அதற்குச் சமமான பெறுமதியால் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.	மீளாய்வாண்டில் கொள்வனவு செய்த ஜீஅய் குழாய்கள் இருப்பு தேவைப்படுகின்ற நிர்மாண நடவடிக்கைகள் 2024 இல் ஆரம்பிக்கப்பட்டு அந்த ஆண்டிற்குள்ளேயே முடிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதனால் அந்த ஜீஅய் குழாய்களுக்கான முழுச் செலவினையும் மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிர்மாண வேலைகளுக்காக ஜீஅய் குழாய் இருப்புக்கள் பயன்படுத்தப்படாததனால் சரியாக கணக்கிடுதல் வேண்டும்.

(ஆ)	முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 1,520,852 தொகையான ஆராய்ச்சி படிக் கொடுப்பனவு மீளாய்வாண்டிற்கான செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததனால் ஆண்டிறகான செலவு அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	ஆராய்ச்சியினைப் பூர்த்திசெய்வதற்கு பல ஆண்டுகள் எடுக்கின்றன. படிக்காக தகமை பெறுகின்ற ஆராய்ச்சிகள் மிகவும் சிறிய அளவுடையதாகும். கொடுப்பனவுக்கான அங்கீகாரம் ஆராய்ச்சிகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் கிடைக்கின்றது மற்றும் 2024 ஆம் ஆண்டிற்காக அங்கீகரித்த ரூபா 1,520,852 தொகை நடைமுறை ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இற்கு இணங்க கணக்குவைத்தல் வேண்டும்.
(இ)	2019 ஆம் ஆண்டின் போது கொழும்பு பிரதேசத்தில் கொள்வனவு செய்த 11.4 பேச்சர்ஸ் காணி மற்றும் கட்டிடங்களுக்காக ரூபா 38,349,500 கொள்வனவுக் கிரயம் செலவு செய்யப்பட்டிருந்தது. இந்த ஆதனத்தை கொள்வனவு செய்யும் போது காணி மற்றும் கட்டிடத்தை பிரித்து கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் மேற்கொள்ளப்பட்ட முழுக் கிரயமும் கட்டிடத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு முழுப் பெறுமதிக்காக வருடாந்த பெறுமானத் தேய்வு கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.	மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீட்டு நடவடிக்கை முடியவடைந்துள்ளது எனவும் அந்த மதிப்பீட்டு அறிக்கை கிடைத்தன் பின்னர் கணக்கீடு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்குகள் சரிசெய்யப்படுதல் வேண்டும்.
(ஈ)	அடுத்துவரும் 12 மாத காலத்தின் போது முதிர்ச்சியடைவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ரூபா 99,473,220 ஆன 02 நிலையான வைப்பு மீதிகள் மற்றும் ரூபா 6,847,304 ஆன திறைசேரி உண்டியல்கள் என்பன நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்ததனால் நடைமுறையற்ற சொத்துக்கள் ரூபா 106,320,524 ஆல் அதிகரித்தும் நடைமுறைச் சொத்துக்கள் அத்தொகையால் குறைத்தும் காட்டப்பட்ருந்தது.	கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்கப்பட்ட ரூபா 99,473,320 பெறுமதியான நிலையான வைப்பு மீதி மற்றும் ரூபா 6,847,304 ஆன திறைசேரி உண்டியல் மீதியை நடைமுறைச் சொத்துக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இற்கு இணங்க சொத்துக்களை சரியாக வகைப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும்.
(உ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் 41 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீடு மாற்றமடைதலின் தாக்கம் நடைமுறை ஆண்டின் இலாபத்திற்கு மற்றும் அடுத்துவரும் ஆண்டுகளின்	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் பிரகாரம் மருத்துவ உதவி செலவுகள் ரூபா 93,982 இனை செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீட்டு மதிப்பீடுகில் மாற்றமடைதல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

	இலாபத்திற்கு செம்மையாக்கப்பட வேண்டிய போதிலும் இரண்டு உத்தியோகத்தர்களின் கடந்த இரண்டு ஆண்டுகளின் மருத்துவ உதவிகளுக்கான ஒதுக்கங்களின எஞ்சியுள்ள மீதிகளின் அடிப்படையில் நடைமுறை ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 93,982 மருத்துவ செலவுகள் மற்றும் ஆண்டில் விலகிச் சென்று 13 உத்தியோகத்தர்களுக்காக முன்னைய ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 327,100 நிறுத்திவைத்த உழைப்புக்களுக்கு செம்மையாக்கப்பட்டிருந்தது.		இலக்கம் 03 இற்கு இணங்க செம்மையாக்குதல் வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மருத்துவ செலவுகளுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,583,848 மீதியில் மீளாய்வாண்டின் போது நிறுவனத்திலிருந்து விலகிச் சென்ற 13 உத்தியோகத்தர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 450,994 உள்ளடக்கப்பட்டிருந்ததனால் மருத்துவ செலவுகளுக்கான நிதி ஏற்பாடு ரூபா 450,994 அதிரித்து காட்டபபட்டிருந்தது.	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மருத்துவ உதவிச் செலவுகள் நிதி ஏற்பாட்டில் உள்ளடக்கப்பட்ட விலகிச் சென்ற 13 உத்தியோகத்தர்களுக்கான நிதி ஏற்பாடு ரூபா 450,944 மீதியினை சரியாக செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இற்கு இணங்கும் வகையில் கணக்குகள் சரிசெய்யப்படுதல் வேண்டும்.
(எ)	மீளாய்வாண்டிற்கான ரூபா 7,699,934 மருத்துவ செலவுகள் (நலன்புரி செலவுகள்) சம்பள செலவுகள் தலைப்பின் கீழ் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் ரூபா 14,486 மருத்துவ செலவுகளுக்கான மிகை ஒதுக்கீடு ஏனைய வருமானங்களின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	மீளாய்வாண்டின் ரூபா 7,699,934 ஆன மருத்துவ உதவி செலவுகள் (நலன்புரி செலவுகள்) சம்பள தலைப்பின் (ஆளணி வேதனம்) கீழ் காட்டியமையினை சரிசெய்வதற்கு மற்றும் மருத்துவ உதவி மிகை அல்லது பற்றாக்குறை ஒதுக்கீட்டினை நலன்புரி செலவுகளின் கீழ் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செலவுகளுக்குரிய சரியான செலவுத் தலைப்பினை அடையாளங்கண்டு கணக்குகளை சரிசெய்தல் வேண்டும்.

1.5.2 கணக்கீட்டு கொள்கை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
வெளிக்கள உபகரணங்கள் மற்றும் விவசாய உபகரணங்களாக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 6,207,600 சொத்துக்கள் முன்னைய ஆண்டின் போது மோட்டார் வாகனங்களாக அடையாளம்	உரிய பெறுமானத் தேய்வுப் பெறுமதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இற்கு இணங்கும் வகையில் கணக்குகள்

காணப்பட்டு கணக்குகளுக்கிடையே மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வெளிக்கள உபகரணங்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் வருடாந்த கிரயத்தின் அடிப்படையில் 15 சதவீதமும், மோட்டார் வாகனம் வருடாந்தம் 25 சதவீதமும் பெறுமானத் தேய்வு செய்தல் நிறுவனத்தின் பெறுமானத் தேய்வு கொள்கை என்பதனால் இந்த பெறுமானத் தேய்வு விகிதத்திலுள்ள மாற்றங்களின் காரணமாக முன்னைய ஆண்டுகள் தொடர்பாக குறைத்து அறிக்கையிடப்பட்டிருந்த பெறுமானத் தேய்வுப் பெறுமதிக்காக செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை.		சரிசெய்யப்படுதல் வேண்டும்.

1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு பொதுப் பேரேட்டிற்கு இணங்க நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்கள் கணக்கிலுள்ள மீதி ரூபா 249,393,070 ஆக இருந்ததுடன் நிதிக் கூற்றுக்களில் அந்த மீதி ரூபா 77,596,156 ஆக ரூபா 171,796,914 குறைத்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	பரீட்சை மீதியில் மற்றும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 77,596,156 மீதி சரியான மீதி ஆனதுடன் அந்த மீதி இறுதி நிதிக்கூகூற்றுக்களிலும் உள்ளடக்கப்படுகின்றது. நிறுத்திவைத்த உழைப்புக் கணக்கின் பிழையான மீதியை காட்டுதல் கணக்கீட்டு முறைமையில் காணப்பட்ட குறைபாடு என்பதனால் அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இற்கு இணங்கும் வகையில் கணக்குகள் சரிசெய்யப்படுதல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் போது ஊழியர் சேமலாப நிதியத்திற்கான ஊழியரின் பங்களிப்பாக சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட 10 சதவீதம் அளவான ரூபா 13,547,180 மொத்த சம்பளத்தின் கீழ் காட்டப்படாது ஊழியர் சேமலாப நிதியத்தின் செலவுக் கணக்கிற்கு வரவு வைத்ததனால் சம்பள செலவு அத்தொகையால் குறைத்தும் ஊழியர் சேமலாப நிதியச் செலவு அத்தொகையால் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது.	இந்த பங்களிப்பு பணம் செலுத்தலினை சரியாக செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இற்கு இணங்கும் வகையில் கணக்குகள் சரிசெய்யப்படுதல் வேண்டும்.

(இ)	மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் காணப்பட்ட பணிக்கொடைக்கான ஒதுக்கீட்டு மீதியில் உள்ளடக்கப்பட்ட 14 ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 10,547,550 பணிக்கொடைப் பணம் மீளாய்வாண்டிற்கான ஒரு செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததனால் ஆண்டிற்கான செலவு அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	பணிக்கொடை பணத்தை செலுத்தும் போது கடந்த ஆண்டு தொடர்பாக ஒவ்வொரு ஊழியருக்குமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணம் பணிக்கொடை ஒதுக்கீட்டு கணக்கின் மூலம் செம்மையாக்கும் நடைமுறை ஆண்டிற்கான பணிக்கொடைப் பணத்தை அந்த ஆண்டு தொடர்பாக கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	செலவுகளுக்காக மேற்கொள்ளப்படுகின்ற நிதி ஏற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இற்கு இணங்க செம்மையாக்கப்படுதல் வேண்டும்.
(ஈ)	நிறுவனத்தினால் பயன்படுத்தப்படுகின்ற 207.363 ஹெக்டயர் அளவிலான 03 காணித் துண்டுகளின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செயயப்பட்டிருக்காததனால் ஆதனம், பொறி மற்றும் உபரணங்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.	சியம்பலாண்டுவ, தெனியாய, கந்தளாய் ஆகிய உப நிலையங்களுக்குரிய காணித்துண்டுகளின் உரிமை தொடர்பாக பிரச்சினையான நிலைமை காணப்படல் மற்றும் அவை தீர்த்துவைக்கப்படாமையின் காரணமாக அக்காணிகளின் உரிமை சம்பந்தமான பிரச்சினையை தீர்த்துவைத்ததன் பின்னர் மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களுக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இல் காட்டப்படுகின்ற வரையறைகளுக்கு இணங்க ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் சரியாக அடையாளங்காணப்படுதல் வேண்டும்.

1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

வியடம்		தொகை ரூபா	வழங்கப்படாத கணக்காய்வு சான்று	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	158,009,293	மதிப்பீட்டு அறிக்கை	மதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களுக்கு மற்றும் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவினால் மதிப்பீடு செய்த சொத்துக்களுக்குரிய மதிப்பீட்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும்	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இற்கு இணங்கியதான தொழில்சார் மதிப்பீட்டாளர்கின் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ)	பணிக்கொடைக்கு ஒதுக்கீடு செய்தல்	100,206,723	தகமையுள்ள மதிப்பீட்டாளர்களின் காப்பீட்டு மதிப்பீட்டு அறிக்கை	பணிக்கொடைக்காக ஒதுக்கீடு செய்தலானது 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் கணிக்கப்படுவதுடன் அதற்கிணங்க செய்யப்பட்ட ஒதுக்கீடுகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	தகமைபெற்ற மதிப்பீட்டாளர்களின் காப்பீட்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
(இ)	இறுதி இருப்பு	33,277,162	இருப்பு மெய்மையாய்வு அறிக்கை	பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கையினை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கையினை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டிய பணம்

கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
03 சீனி உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 4,890,951 பணம் 02 ஆண்டுகளிலிருந்து 05 ஆண்டுகள் வரையான காலம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கடன் பணத்தை அறவீடு செய்வதற்கு அந்த நிறுவனங்களுக்காக கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. வரிசை அமைச்சினாலும் கொடுப்பனவு செய்யுமாறு உரிய நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பாக நல்ல பதில் கிடைக்கவில்லை	கடன் மீதியை உரிய காலத்தில அறவீடு செய்யாத உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கும் செயற்பாடற்ற கடன் மீதியை அறவீடு செய்வதற்கும் பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு		இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை				
(i)	நிதிப்பிரமாணம் 757(2) மற்றும் (4)	பொருள் மீளாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	இருப்புக்கள் மற்றும் சொத்துக்களின் மீளாய்வு முடிவடைந்துள்ளது. அந்த மீளாய்வு அறிக்கை துரிமாக கணக்காய்வளார் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படும்.	தொடர்புபட்ட நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொருள் மீளாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
(ii)	நிதிப்பிரமாணம் 1646	நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	ஓட்ட அட்டவணைகள் மாதாந்தம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. வேண்டிக் கொண்ட சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2024 யூலை மாதத்திலிருந்து மாதாந்தம் ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிககப்பட்டுள்ளது.	தொடர்புபட்ட நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலத்தின் போது ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 46,807,733 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 49,180,086 ஆகும். அதற்கிணங்க் நிதி விளைவுகளில் ரூபா 2,372,353 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 25,345,791 ஆல் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டில் ரூபா 286,096,000 ஆன அரசாங்கத்தின் மூலதன மற்றும் வருமான மானியம் மீளாய்வாண்டின் போது ரூபா 320,616,000 வரை ரூபா 34,520,000 ஆல் அதிகரித்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
கந்தளாய் சீனித் தொழிற்சாலையினை ஆரம்பிக்கும் குறிக்கோளில் அதற்கு தேவையான விதை கரும்பினை வழங்குதல், பிரதேசத்திற்குப் பொருத்தமான கரும்பு இனத்தை தெரிவு செய்தலினை உள்ளடக்கி ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கான வசதிகளை வழங்குவதனை குறிக்கோளாகக் கொண்டு 2011 ஆம் ஆண்டின் போது கந்தளாய் சீனித் தொழிற்சாலையின் காணியில் 400 ஏக்கர் அளவான காணி மற்றும் 13 கட்டிடங்கள் கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் நிறுவனத்தினால் 18 நபர்களைக் கொண்ட ஆளணியினர் இணைத்துக் கொள்ளப்பட்டு 2024 ஆம் ஆண்டு வரை 13 ஆண்டுகள் காலத்தில் மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகளாக ரூபா 147.5 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் கந்தளாய் சீனித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படாமையால் அச்செலவுகள் விளைவற்றதாக மாறியிருந்தது.	கந்தளாய் சீனித் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் குறிக்கோள் இன்னும் காணப்படுவதனால் இந்த உப நிலையம் செயற்படுத்தப்படுகின்றது என்பதாக வரிசை அமைச்சினால் வாய்மொழி மூலம் தெரியப்படுத்தப்பட்டது. இது சம்பந்தமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் சிபாரிசின் பிரகாரம் நிருவாக சபைக்கு அனுப்பிவைத்து வரிசை அமைச்சுடன் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கந்தளாய் உப அலுவலகத்தினை செயற்படுத்தும் தேவைப்பாடு தொடர்பாக மீண்டும் கவனித்து பார்ப்பதற்கும் அதன் சொத்துக்களிலிருந்து முறையான பயன்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 அடையாளங்காணப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
05 சந்தர்ப்பங்களின் போது களஞ்சியத்திலுள்ள ரூபா 456,373 பெறுமதியான 860 லீற்றர் கிளைபோசெட் பெரல்களிலிருந்து கசிவு ஏற்பட்டிருந்தது எனக் காட்டி அந்த அளவு இருப்பு பதிவேட்டிலிருந்து கழிக்கப்பட்டிருந்தும் நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொறுப்புக்கூற	2025-04-10 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தின் சிபாரிசுக்கு இணங்க இது சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை அடையாளம் காண்பதற்காக ஒரு புலனாய்வினை	பொறுப்பக்கூற வேண்டிய தரப்பினர்களை அடையாளங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் நட்டத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை

	வேண்டிய தரப்பினர்களை நிர்ணயித்து அந்த நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நடாத்துவதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.	எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	நிறுவனம் தொடர்பாக அலுவலக அமைப்பு கையேட்டினை (MOP) தயாரிப்பதற்காக 2019 ஆம் ஆண்டின் போது இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்திற்கு (SLIDA) ரூபா 217,383 முற்பணம் மற்றும் 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 217,383 ஆக மொத்தமாக ரூபா 434,766 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அலுவலக அமைப்பு கையேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட அலுவலக அமைப்பு கையேடு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக 2025 பெப்ரவரி 20 ஆந் திகதி அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	வரைபு அலுவலக அமைப்பு கையேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	05 உத்தியோகத்தர்களுக்கு பட்டப் படிப்பு கற்கைநெறி மற்றும் ஏனைய தொழில்சார் பரீட்சைகளுக்கு பயிலும் செலவாக 2003 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 11,513,991 செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அக்கற்கை நெறிகளின் காலம் முடிவடைந்திருந்த போதிலும் உத்தியோகத்தர்களால் உரிய தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டது என்பது கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை.	பட்டப்படிப்பு கற்கை நெறி மற்றும் ஏனைய தொழில்சார் பரீட்சைகளுக்கு பயிலும் செலவுகள் மற்றும் நிகழ்கால நிலைமைகள் தொடர்பான விபரமான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	நிர்ணயிக்கப்பட்ட கற்கை நெறிகளைப் பூரணப்படுத்தாத உத்தியோகத்தர்களிட மிருந்து உரிய கற்கை நெறிக் கட்டணத்தை மீண்டும் அறவீடு செய்தல் வேண்டும்.
(இ)	மீண்டுவரும் செலவுகளுக்காக பொதுத்திறைசேரியினால் வழங்கப்படுகின்ற நிதியைப் பயன்படுத்தி மருத்துவ காப்புறுதித் திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்குப் பதிலாக தேசிய காப்புறுதி திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்குப் பதிலாக தேசிய காப்புறுதி நிதியத்தின் மூலம் காப்புறுதியை பெற்றுக்கொள்ள வேண்டும் என தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தினால் 2017 ஆம் ஆண்டின் போது தெரியப்படுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக கவனம் செலுத்தாது	1984 இன் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி நிறுவன அதிகாரச் சட்டத்தின் 3(ஊ) பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்தின் சேவையில் ஈடுபட்டவர்களுக்கு நலன்புரி வசதிகளை வழங்குவதன் கீழ் இந்த மருத்துவ உதவித் திட்டம் நிறுவனம் ஆரம்பத்திலிருந்து இன்று வரை நிருவாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அமுலப்படுத்தப்படுகின்றது.	1981 இன் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி நிறுவன அதிகாரச்சட்டத்தின் 3(ஊ) பிரிவின் பிரகாரம் ஊழியர் நலன்புரி மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை வழங்குவதற்காக பொதுத்திறைசேரியினால் வழங்கப்படுகின்ற மீண்டுவரும் நிதியை பயன்படுத்துவதற்கு

	நிறுவனத்தினால் மீளாய்வாண்டின் போதும் திறைசேரியின் நிதியை பயன்படுத்தி ரூபா 7,824,328 மருத்துவ உதவிப் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.		நிதி ஏற்பாடு வழங்கப்படவில்லை என்பதனால் தொடர்புபட் பிரிவில் குறிப்பிட்ட நிதியின் மூலம் அந்த நடவடிக்கை செய்யப்படுதல் வேண்டும்.
(ஈ)	நிறுவனத்தின் நிதியை பயன்படுத்தி ஊழியர்களுக்கு வீடமைப்பு கடன்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை 07 ஊழியர்களிடமிருந்து ரூபா 3,820,637 வீடமைப்புக் கடன் அறவீடு செய்ய வேண்டி இருந்தது. மேலும் உரிய வீடமைப்புக் கடன் திட்டத்தினை அமுலப்படுத்துவதற்கு தேவையான முறையான அங்கீகாரம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	செயற்பாட்டு தாபன கையேட்டின் IX ஆம் அத்தியாயத்திற்கு இணங்க சுழற்சி நிதியத்தின் மூலம் கடன் வகைகள் வழங்கப்படுகின்றது எனவும் அது நிருவாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது.	முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் கடன் திட்டத்தினை அமுல்ப்படுத்துதல் வேண்டும்.

3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	முற்பண பிணைகளைப் பெற்றுக்கொள்ளாது பல்வேறு வெளி நிறுவனங்களுக்கு மீளாய்வாண்டில் 36 சந்தர்ப்பங்களின் போது ரூபா 3,854,067 பணம் முற்பணமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2025 ஏப்ரல் 25 ஆந் திகதி வரையும் அதில் ரூபா 341,312 முற்பணம் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த முற்பணங்களில் தீர்த்து வைக்கப்படாத ரூபா 341,312 முற்பணங்களில் 2025 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை ரூபா 12,534 தீர்த்துவைக்கப்பட்டுள்ளது எனவும் மிகுதியான முற்பணங்களை துரிதமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எதிர்வரும் காலங்களில் முற்பண பிணைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.	நிலுவை முற்பணங்கள் துரிதமாக தீர்த்துவைக்கப்பட வேண்டியதுடன் முற்பணங்களை பிணை இன்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2019 ஆம் ஆண்டின் போது அபிவிருத்தி நடவடிக்கைகள் முடிவடைந்த SL03 983, SL03 1025	உரிய புதிய கரும்பு இனம் 2020 ஆம் ஆண்டின் போது சீனிக் கம்பனிகள் மற்றும் கரும்பு விவசாயிகளுக்கு	தாமதமின்றி பெரிய அளவிலான ஆலைப் பரீட்சிப்புக்களை மேற்கொண்டு மேலதிக

	மற்றும் SL03 1077 ஆகிய கரும்பு இனங்களை வழங்குவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற பெரிய ஆலைப் பரிசோனைகள் (Large Mill Test) மீளாய்வாண்டின் இறுதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	வழங்கப்படுகின்றது எனவும் பெரிய அளவிலான இனங்களை மதிப்பீடு செய்தல் 2021 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டதுடன் அதனை 2024 ஆம் ஆண்டின் போது பூரணப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது எனவும் பயிர்ச் செய்கையை விரிவுபடுத்துவதற்கு போதியளவான விதைக் கரும்புகளை தயாரிப்பதற்கு முடியாதுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	நிறுவனத்தினால் முன்னைய ஆண்டின் போது உற்பத்தி நடவடிக்கைகள் முடிவடைந்திருந்த 05 பசளை தாவர ஊட்டச்சத்து உற்பத்தி மற்றும் கிருமி கட்டுப்பாட்டு உற்பத்திகளுக்காக ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இன்று வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஆக்கவுரிமை விண்ணப்ப பத்திரங்களுக்கு தேவையான ஆவணங்களையும் தகவல்களையும் SRI:BL இற்குச் சமர்ப்பித்து ஆக்கவுரிமை விண்ணப்பித்தல் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கும் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	நிறுவனத்தின் 64 உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் வாடகை அறவிடப்படாது உத்தியோகபூர்வ இல்லங்கள் வழங்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது உத்தியோகபூர்வ இல்லங்களின் மின்சார கட்டணத்திற்காக நிறுவனத்தினால் ரூபா 1,881,383 செலவு செய்யப்பட்டிருந்தது.	1984 இன் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி நிறுவன அதிகாரச் சட்டத்தன் 3(ஊ) பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நலன்புரி வசதிகளை வழங்குவதன் கீழ் இந்த உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குதல் மற்றும் மின்சாரம் வழங்குதல், நிருவாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பபட்டுள்ளது எனவும் நலன்புரி நடவடிக்கைகளின் கீழ் அந்த தரத்திற்கு தகமையுள்ள மின்சார அலகுகள் மாத்திரம் வழங்கப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது.	1981 இன் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி நிறுவன அதிகாரச் சட்டத்தின் 3(ஊ) பிரிவின் பிரகாரம் ஊழியர் நலன்புரி மற்றும் பொழுது போக்கு வசதிகளை வழங்குவதற்காக பொதுத்திறைசேரியிடமிருந்து வழங்கப்படுகின்ற மீண்டுவரும் நிதியைப் பயன்படுத்துவதற்கு நிதி ஏற்பாடு வழங்கப்படாததனால் தொடர்புபட்ட பரிவில் குறிப்பிட்ட நிதியின் மூலம் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ)	அலுவலகத்தின் மற்றும் உத்தியோகபூர்வ இலல்லங்களின் நீர் கட்டணத்திற்காக மீளாய்வாண்டின் போது நிறுவனத்தினால் ரூபா 364,325 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக நீர் மீட்டர் பொருத்தப்பட்டிருக்காததனால் உத்தியோகபூர்வ இல்லங்களின் நீர் பயன்பாடு தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச சமர்ப்பிக்கப்படவில்லை.	1984 இன் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி நிறுவன அதிகாரச் சட்டத்தின் 3(ஊ) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நலன்புரி வசதிகளை வழங்குவதன் கீழ் இந்த நீர் வழங்கல் நிறுவனத்தின் நிருவாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்படுகின்றது.	1981 இன் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி நிறுவன அதிகாரச் சட்டத்தின் 3(ஊ) பிரிவின் பிரகாரம் ஊழியர் நலன்புரி மற்றும் பொழுது போக்கு வசதிகளை வழங்குவதற்காக பொதுத்திறைசேரியினால் வழங்கப்படுகின்ற மீண்டுவரும் நிதியை பயன்படுத்துவதற்கு நிதி ஏற்பாடு வழங்கப்படாமையால் தொடர்புபட்ட பிரிவில் குறிப்பிட்ட நிதியின் மூலம் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

3.6 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
தேவைப்பாட்டினை முறையாக அடையாளங்காணாது களஞ்சியப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததனால் ரூபா 8,437,096 பெறுமதியான 52 இருப்பு விடயங்கள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்று களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.	களஞ்சிய பொருட்கள் சம்பந்தமாக ஒரு குழுவினை நியமித்து அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் அக்குழுவின் சிபாரிசின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	விளைவற்ற இருப்புக்கள் முறைப்படியாக அகற்றப்பட வேண்டியதுடன் அந்த இருப்புக்களை கொள்வனவு செய்தல் சம்பந்தமாக பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறைப்படியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.7 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்

	கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில், ஆய்வுகூடத்தில் மற்றும் கந்தளாய் காவல் நிலையத்தில் அலுமினியம் கதவுகள் மற்றும் யன்னல்களைப் பொருத்தும் வேலைகளுக்காக ஒப்பந்தக்காரர் ஒருவரினை தெரிவு செய்யும் போது ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணத்தை காட்டாது ஆகக் குறைந்த கேள்வியை நிராகரித்து குறைந்த	ஆகக்குறைந்த விலையைச் சமர்ப்பித்த வழங்குனர் உரிய ICTAD பதிவுசெய்தலினை நிறைவேற்றி இருக்காததனால் மதிப்பீட்டின் போது அந்த வழங்குனர் பொருத்தமற்ற வழங்குனராக அடையாளங்காணப்பட்டு அது பற்றி தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அறிக்கையில்	இது சம்பந்தமாக முறையான விசாரணைகளை நடாத்துவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவீடு

	விலையினை விட ரூபா 502,595 அதிக விலையினைச் சமர்ப்பித்த கேள்விதாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. கொடுப்பனவு விலைப்பட்டியல்களுக்கு இணங்க இணங்கிக்கொண்ட விலைகளை மிகைத்து 11 வேலை விடயங்களுக்காக ரூபா 271,018 மிகையாக செலுத்தப்பட்டிருந்ததுடன் வேலை விபரங்களின் பிரகாரம் முழுமையாக கண்ணாடியினைப் பயன்படுத்தி பூர்த்திசெய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த கதவுகள், கண்ணாடிகளையும் களெடின்களையும் பயன்படுத்தி பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் கண்ணாடிகளை பயன்படுத்தி பூர்த்திசெய்யும் விலையின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததனால் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 83,519 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.	குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நிர்மாணம் தொடர்பான மதிப்பீடு 2020 ஆம் ஆண்டில பெற்றுக்கொள்ளப்பட்டு விலைகள் கோரப்பட்டு 2021 ஆம் ஆண்டின் யூன் மாதம் ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரரின் விலைகளுக்கும் மதிப்பீட்டு விலைகளுக்குமிடையே ரூபா 656,342 வித்தியாசம் காணப்பட்டதனால் அதனை மதிப்பீட்டு விலையில் நிறைவேற்றுவதற்கு கலந்துரையாடல் நடைபெற்றது எனவும் மதிப்பீட்டிற்கு இணங்க முழுமையாக கண்ணாடி பயன்படுத்துதல் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தேவைப்படுகின்ற பாதுகாப்பினை கவனத்தில் கொண்டு மாற்றப்பட்டுள்ளது எனவும் பெறுகைக்குழு கலந்துரையாடி இணங்கிக் கொண்ட விலையின் கீழ் மாத்திரம் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.	செய்யவேண்டியதுடன் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2019 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை 30 நிர்மாண வேலைகளுக்காக வெளித்தரப்பினர்களுக்கு கட்டணம் செலுத்தி மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. அவற்றிற்கு மத்தியில் 2021 ஆம் ஆண்டின் போது மஹவெலி அதிகார சபையின் கடிதத்தலைப்பினை பயன்படுத்தி இரண்டு நிர்மாண வேலைகளுக்காக மொத்தமாக ரூபா 24,411,265 தொகையான மதிப்பீட்டினை தயாரித்து சமர்ப்பித்த மஹவெலி அதிகாரசபையின் ஒரு உத்தியோகத்தருக்கு மதிப்பீடு தயாரிக்கும் கட்டணமாக ரூபா 976,425 அவரின் தனிப்பட்ட கணக்கிற்கு செலவு வைக்கப்படும் வகையில் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த இரண்டு மதிப்பீடுகள் தொடர்பான நிர்மாண நடவடிக்கைகள் 2025 மே 02 ஆந்	இலங்கை மஹவெலி அதிகாரசபையின் பிரதான பொறியியலாளர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணஙக கொடுப்பனவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கு போதியளவு பாதீட்டு நிதி ஏற்பாடு இல்லாததன் காரணமாக பல கட்டங்களில் அச்செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தி 2025 ஆம் ஆண்டில் ஒரு பகுதியும் அடுத்து வரும் ஆண்டுகளில் மிகுதிப் பகுதிக்குரிய நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பொறியியல் சேவைக்காக செலுத்தக்கூடிய	இது சம்பந்தமாக முறையான விசாரணைகளை நடாத்தி ஒழுங்கீனத்திற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	திகதி வரையும் நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இன்னும் 20 நிர்மாண வேலைகளுக்காக இரண்டு வெளி நபர்கள் மற்றும் ஒரு நிறுவனத்தினால் மொத்தமாக ரூபா 33,704,917 தொகையான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மதிப்பீடுகள் தயாரித்தல் கட்டணமாக ரூபா 621,456 செலுத்தப்பட்டிருந்தும் அக்கட்டணத்தை செலுத்தும் அடிப்படை மற்றும் அக்கட்டணத்தை செலுத்துவதற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	அங்கீகரித்த விகிதத்தின் அடிப்படையில் (5% உச்ச அளவு) செலுத்துவதற்காக பெறுகைக்குழு தமது சிபாரிசினை வழங்கியுள்ளதனால் குழுவீன் அதிகாரத்தினை மீறி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட சேவை வழங்கும் தனிப்படட்டவர் மற்றும் ஒரு நிறுவனத்தின் மூலம் நேரடியாக பொறியியல் சேவையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.	
(இ)	தெனியாய கரும்பு விதை இனவிருத்தி நிலையத்தின் நுழைவு வீதி, தடுப்புச் சுவர், மற்றும் வாயில் கதவினை நிர்மாணிப்பதற்காக 15 வேலை விடயங்களை உள்ளடக்கி ரூபா 1,285,930 மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டினைத் தயாரிக்கும் கட்டணமாக ஒரு வெளி நபருக்கு ரூபா 19,289 செலுத்தப்பட்டிருந்தது. அங்கீகரித்த மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாத 09 வேலை விடயங்களை நிறைவேற்றி அதற்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது ஒப்பந்தக்காரருக்கு ரூபா 1,041,165 செலுத்தப்பட்டிருந்ததுடன் நிர்ணயிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட விலையினைப் பயன்படுத்தாது இரண்டு வேலை விடயங்களுக்காக மொத்தமாக ரூபா 263,603 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் இந்த மேலதிக வேலைகளுக்காக கொடுப்பனவு செய்த பணத்தில் ஏனைய நிர்மாண வேலைகள் தொடர்பாக மொத்தமாக ரூபா 51,000 ஆன 03 வேலை விடயங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.	அமைச்சு செயலாளருக்கு தெரியப்படுத்தி மற்றும் நிருவாக சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. தொழில்நுட்ப மதப்பீட்டுக் குழுவின் சிபாரிசுக்கு இணங்க பெறுகைக்குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. நிறுவனத்தின் தேவைப்பாட்டிற்கு இணங்க அப்போதிருந்த பணிப்பாளரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் அந்த இரண்டு மதிப்பீடுகளிலும் உள்ளடக்கப்படாத போதிலும் வேலைகளை முடிவு செய்வதற்கு தேவையான வேலைப் பகுதிகளுககாக மதிப்பீட்டினைப் பெற்று பணம் செலுத்தப்பட்டுள்ளது.	முறையான விசாரணைகளை நடாத்தி உரிய அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவுகள் தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. மனித வளங்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
உள்நாட்டு கரும்பு பயிர்ச் செய்கையின் உயர்ந்த வணிகரீதியான கரும்பு இனத்தை மேம்படுத்துதல் மற்றும் அதற்காக ஆராய்ச்சிகளை நடாத்துவதற்காக தோற்றுவிக்கப்பட்டுள்ள ஒரேயொரு நிறுவனம் கரும்பு ஆராய்ச்சி நிறுவனமாக இருந்த போதிலும் அதன் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு அத்தியவசியமான பிரதான பதவியான பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம்) பதவி 2020 ஆம் ஆண்டிலிருந்தும் பிரதான தொழில்நுட்ப பரிமாற்று உத்தியோகத்தர் பதவி, 05 பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் சிரேஷ்ட தொழில்நுட்ப பரிமாற்று உத்தியோகத்தர் பதவிகள் என்பன வெற்றிடமாகக் காணப்பட்டன. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் 03 ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவியிள் வெற்றிடமாகக் காணப்பட்டன.	வெற்றிடமான பதவிகளை துரிதமாக நிரப்புவதற்கு அங்கீகாரத்தினை வேண்டி வரிசை அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உரிய அங்கீகாரத்தினைப் பெற்ற உடன் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தற்போதைய செயற்பாடுகளுக்கு இணங்க ஆளணியை மீளாய்வு செய்து தேவையான வெற்றிடங்களை துரிதமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.